ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

परिभ्रमसि किं मुधा क च न चित्त विश्राम्यतां
स्वयं भवति यद्यथा भवति तत्तथा नान्यथा ।
अतीतमननुस्मरन्नपि च भाव्यसङ्कल्पय-
न्नतर्कितसमागमाननुभवामि भोगानहम् ॥

भर्तृहरिः ॥

ஹே மனமே! வீணில் கண்டவிடங்களில் ஏன் சுற்றுகிறாய்? போரும் ஓரிடத்தில் சிரமபரிகாரம் செய்துகொள். ஈசன் எதெதை நமக்குக் கிடைக்கும்படி நியமனம் செய்திருக்கிறாரோ அந்த வஸ்து தானாகவே நம்மைவந்தடையும். நாம் அடைவதற்குற்ற பாக்கியம்பெறாத ஒன்றை அடைய வேண்டுமென்று எவ்வளவு முயற்சி செய்தாலும் அது கிட்டாது. ஆகையால் நடந்த காரியத்தை உத்தேசித்து வருத்தமடையாமலும், இனிவரும் காரியத்தைக் குறித்துப் பலவாறாக சங்கற்பிக்காமலும், இருந்துகொண்டு எதிர்பாராமல் தாமாகவரும் போகங்களை அனுபவிப்பதிலேயே திருப்தியுடையவனாக இருக்கிறேன்.

இதனால் பொருளில் அதிகப்பேராசைகொண்டு கண்டவிடங்களில் தனக்கேற்பட்ட விதிநியமங்களைவிட்டு அலையக்கூடாது என்றும், ஏதாகிலும் எதிர்பார்த்த ஒன்று கிட்டாவிடில் அதைப்பற்றி மறுபடியும் அற்பம்கூட சிந்திக்கக்கூடாதென்றும், இனி இருக்கவேண்டிய காலத்திலும் அனாவசியமாய்ப் பற்பல சங்கற்பங்களைச் செய்துகொண்டு எப்பொழுதும் கஷ்டப்படாமல் ஈசன் எந்தெந்த சமயங்களில் எதெதை நமக்கு அளிக்கிறாரோ அதைக்கொண்டே மனத்திருப்தியையடைந்து போருமென்று வைராக்கியத்துடன் இருக்கவேண்டியது மானிடர்களின் கடமையென்றும் அவ்விதமில்லாவிட்டால் கஷ்டமடைவார்களென்றும் அறிவிக்கப்படுகிறது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

சண்டாளஜாதி தத்வ நிரூபணம்.

(௩௦௦-வது பக்கத்தொடர்ச்சி.)

பராசர ஸ்மிருதியிலும்,

युगं युगद्वयंचैव त्रियुगं च चतुर्युगम् ।
चण्डालसूतिकोदक्या पतितानामधःक्रमात् ॥

சண்டாளன், பிரஸவித்தவள், வீட்டுக்காகாதவள், பதிதன் இவர்களுக்கு முறையே 4, 3, 2, 1-யுகம் விலகவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

१५ हारीतस्मृतिः ॥

चण्डालैस्सह संभाष्य द्विजसंभाषणाच्छुचिः ।
गायत्रीं व्याहरेद्वापि इति धर्मो व्यवस्थितः ॥

சண்டாளனுடன் பேசினல் பிராமணனுடன் மறுபடியும் ஸம்பாஷணம் செய்வதினுல் சுத்தியாகிறுன். அல்லது காயத்திரி மந்திரத்தையாவது ஜபிக்கவேண்டும் என்று தர்மத்தின் வியவஸ்தை. (ஹாரீதர்,)

१६ वृद्धहारीतस्मृतिः ॥

चण्डालः पतितोवापि यस्मिन्गेहे समाविशेत् ।
त्यक्त्वा मृण्मयभाण्डानि गोभिः संक्रामयेत् गृहम् ॥ 9-401.

சண்டாளனுகிலும், பதிதனுகிலும் ஓர் கிருஹத்தில் பிரவேசித்தால் அவ்வீட்டிலுள்ள மண்பாண்டங்களை விலக்கி எறிந்துவிட்டு

மூன்று தினங்கள் பசுக்களைக்கட்டிய பிறகுதான் சுத்தமாகிற தென்று விருத்தஹாரீத ஸ்மிருதியில் 9-வது அத்தியாயம் 401 வது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

பின்னும்,

अमेध्यशवचण्डाळमद्यमांसादिदूषितान् ।
कूपादुद्धृत्य कळशैस्सहस्रं रेचयेज्जलम् ॥

சவம், சண்டாளன், மத்தியம் முதலானவைகளின் ஸம்பந்தத்தால் கிணறுகளிலிருக்கும்ஜலம்தோஷமுள்ளதாகின்றது. அதைப் போக்க அக்கிணற்றிலிருந்தும் ஆயிரம் குடம் தண்ணீர் எடுத்து வெளியில் விடவேண்டும். அதற்குப் பிறகுதான் அது தோஷமற்றதாய் இதரர்களின் உபயோகத்திற்கருகமாகும் என்று இதே அத்தியாயத்தில் 405-வது சுலோகத்தாலும் அறிவிக்கிறார்.

17. ஆபஸ்தம்பர்.

चण्डाळस्पर्शने संभाषणायां दर्शने च दोषः । तत्र प्रायश्चित्तमवगाहनमपामुपस्पर्शने संभाषणायां ब्राह्मणसंभाषा दर्शने ज्योतिषां दर्शनम् ॥

"சண்டாளனைத் தொட்டாலும், அவனுடன் பேசினாலும், அவனைப் பார்த்தாலும் தோஷமுண்டு. இவைகளுக்குப் பிராயச்சித்தம்.—தொட்டால் ஜலத்தில் மூழ்கி ஸ்நானம், பேசினால் பிராமணனுடன் ஸம்பாஷணம், பார்த்தால் ஜ்யோதிஸ்களைப் பார்த்தல்" (ஆபஸ்தம்பர்,)

चण्डाळघातवापीष्वज्ञानाद्यः पिबेज्जलम् ।
उपोष्य रजनीमेकां पञ्चगव्येन शुध्यति ॥
चण्डाळभाण्डतोयं तु द्विजः पीत्वा विमोहितः ।
कृच्छ्रत्रयं प्रकुर्वाणस्ततः पापात्प्रमुच्यते ।
चण्डालेन तु संस्पृष्टा अपो यः पिबति द्विजः ।
कृच्छ्रपादेन शुध्येत्तु पुनः संस्कारमर्हति ॥

"சண்டாளர்களால் வெட்டப்பட்ட கிணறுகளிலிருந்து தெரியாமல் ஜலம் குடித்தால் ஒரு ராத்திரி உபவாஸமிருந்து பஞ்சகவ்யப் பிராசனம் செய்தால் சுத்தியாகிறான். சண்டாளர்களுடைய பாத்திரத்திலுள்ள ஜலத்தை மோஹத்தினால் பிராமணன் குடித்தால் மூன்று கிருச்சிரம் அனுஷ்டித்து பாபத்திலிருந்து விடுதலையடைகிறான். சண்டாளனால் தொடப்பட்ட ஜலத்தைக் குடிக்கும் பிராமணன் கால் கிருச்சிரத்தினால் சுத்தியாகிறான். ஆனாலும் மறுபடியும் ஸம்ஸ்காரம் செய்துகொள்ளவேண்டும்" (ஆபஸ்தம்பர்,)

अन्त्यजैः खानिता कूपास्तटाका वाप्य एव च ।
एषु स्नात्वा च पीत्वा च प्राजापत्येन शुध्यति ॥

"அந்தியஜர்களால் வெட்டப்பட்ட கிணறுகள், குளங்கள், வாபிகள் இவைகளில் ஸ்நானம் செய்தாலும் ஜலம் குடித்தாலும் பிராஜாபத்யத்தினால் சுத்தியடைகிறான்." (ஆபஸ்தம்பர்,)

रजस्वलान्त्यजैस्स्पृष्टा शुना च श्वपचेन च ।
त्रिरात्रोपोषिता भूत्वा पञ्चगव्येन शुध्यति ॥ अ-7-7.

வீட்டுக்குத் தீண்டாதவளான ஸ்திரீக்கு, சண்டாளன், நாய், ச்வபசன் இவர்களுடைய ஸ்பர்சம் ஏற்படுமாகில், மூன்று தினங்கள் உபவாஸமிருந்து முடிவில் பஞ்சகவ்யப் பிராசனத்தால் சுத்தியடைகிறாள் என்று ஆபஸ்தம்பர் அறிவிக்கிறார். தீண்டாதவளுக்கு இவர்களுடைய ஸ்பர்சத்தாலேற்படும் தோஷத்திற்கு இவ்விதம் விதித்தால் நம்போன்ற சுத்தர்களுக்குத் தீண்டாதவர்கள் ஸ்பர்சம் ஏற்பட்டால் அதனால் உண்டாகும் தோஷத்தின் வலிமையை நாமே அறிந்துகொள்ளலாம்.

१८ सुमन्तुः ॥

चण्डालदर्शने सूर्यदर्शनं संभाषणे ब्राह्मणादिव्यवहारः संस्पर्शने सचेलं स्नानमाचरेत् ॥

சண்டாளனைப் பார்த்தால் சூரியதரிசனம், பேசினால் பிராமணருடன் ஸம்பாஷணம், தொட்டால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டும். (ஸுமந்து)

அஸ்பிருசிய ஜாதியார்களால் தொடப்பட்ட அன்னம் புஜிக்க யோக்கியதையில்லை யென்று மேற்கண்ட வசனங்களிலிருந்தே ஊஹிக்கக்கூடியதால் அவ்விஷயமான வசனங்களை இவ்விடம் உதாஹரிக்கவில்லை. அவர்களால் பார்க்கப்பட்டதே தூஷிதமானல் தொடப்பட்டதைப்பற்றிக் கேட்பானேன்?

श्वचण्डाळपतितावेक्षणे दुष्टम् ।

"நாய், சண்டாளன், பதிதன் இவர்களால் பார்க்கப்பட்ட (அன்னம்) துஷ்டம்" என்று கௌதமர் விதிக்கிறார்.

१९ शातातपः ॥

चण्डालोदकभाण्डेषु यः पिबेत्तृषितो जलम् ।
तत्क्षणात्क्षिपते तच्चेत् प्राजापत्येन शुध्यति ।
यदि न क्षिपते तोयं चिरेणैवास्य जीर्यते ।
प्राजापत्यं न कर्तव्यं कृच्छ्रं सांतपनं चरेत् ॥

"சண்டாளனுடைய ஜலபாத்திரத்திலிருந்து தாஹத்தினல் ஜலம் அருந்தினல், உடனே துப்பிவிட்டால் பிராஜாபத்யத்தினல் சுத்தியாகிறான். துப்பாமல் காலதாமதத்தினல் ஜலம் ஜரித்துவிடுமானல் பிராஜாபத்யம் செய்யக்கூடாது. கிருச்சிர ஸாந்தபனமே செய்யவேண்டும்." (சாதாதபர், அப்படியே யமரும்,)

२० व्यासः ॥

चण्डाळभाण्डसंस्पृष्टं पिबेत्तोयमकामतः ।
अहोरात्रोषितःस्नात्वा पञ्चगव्येन शुध्यति ॥
ततःस्नात्वा तथा कुर्यात् कामात्सान्तपनं चरेत् ।
तेषां तटाके कूपे च तथैवोक्ता मनीषिभिः ॥

"சண்டாளனுடைய பாத்திரத்தால் தொடப்பட்ட ஜலத்தைத் தெரியாமல் குடித்துவிட்டால் ஒரு இரவும் பகலும் உபவாஸம் இருந்து பஞ்சகவ்யப்பிராசனம் செய்தால் சுத்தியாகிறான். அதில்

ஸ்நானம் செய்தாலும் அப்படியே செய்யவும், தெரிந்துசெய்தால் ஸாந்தபனம் அனுஷ்டிக்கவேண்டும் அவர்களுடைய குளமாயிருந்தாலும், கிணருயிருந்தாலும் இதே விதிதான் என்று தெரிந்தவர்கள் சொல்கிருர்கள்." (வியாஸர்)

२१ वेदव्यासस्मृतिः ॥

वराटो मेदचण्डालौ दाशः श्वपचकोलिकाः ।
एतेऽन्त्यजास्समाख्याता येचान्ये च गवाशनाः ।
एषां संभाषणे स्नानं दर्शनादर्कवीक्षणम् ॥ 13

"வராடன், மேதன், சண்டாளன் முதலானவர்களும் மற்றும் கோவைப் புசிப்பவர்களும் அந்தியஜன் என்று பிரசித்தமாய்க் கூறப்படுகின்ருர்கள். இவர்களுடன் வியவகாரம் செய்தால் ஸ்நானம் செய்யவேண்டும். இவர்களைப் பார்த்தால் உடனே சூரியனைத் தரிசிக்கவேண்டுமென்று வேதவியாஸ ஸ்மிருதியில் முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது."

கேள்வி.

२२ यमस्मृतिः ॥

यो भुञ्जानोऽशुचिर्वापि चण्डालं पतितं स्पृशेत् ।
क्रोधादज्ञानतो वापि तस्य वक्ष्यामि निष्कृतिम् ॥

எந்தப் பிராமணன் போஜனகாலத்திலும், அசுத்தமாயிருக்கும் காலத்திலும் கோபத்தினுலோ அறிவின்மையாலோ சண்டாளனையும் பதிதனையும் தொடுகின்ருனே அவனுக்குப் பரிகாரம் என்ன ?

ஸமாதானம்.

षड्रात्रं वा त्रिरात्रं वा यथासंख्यं समाचरेत् ।
स्नात्वा त्रिषवणं विप्रः पञ्चगव्येन शुध्यति ॥ 3

அவன் செய்த பாபத்திற்குசிதமாய் ஆறு அல்லது மூன்று தினங்களில் ஒவ்வொருநாளும் மூன்று காலம் ஸ்நானம்செய்து முடிவில்

பஞ்ச கவ்யத்தால் சுத்தியடைகிறுன் என்று யமஸ்மிருதி விதிக்கின்றது.

२३ लघ्वाश्वलायनस्मृतिः ॥

उदक्यां सूतिकांचैव पतितं शवमन्त्यजम् ।
श्वकाकरासभान्स्पृष्ट्वा सवासा जलमाविशेत् 21-13.

வீட்டுக்காகாதவள், பிரஸவித்தவள், பதிதன், சவம், சண்டாளன், நாய், காகம், கழுதை, இவைகளைத்தொட்டால் தரித்திருக்கும் வஸ்திரத்தோடு ஸ்நானம் செய்யவேண்டும். என்று லகு ஆச்வலாயன மஹரிஷி கூறுகின்றுர்.

२४ वसिष्ठस्मृतिः ॥

चण्डाळपतितोपस्पर्शने सचेलस्नातः सद्यः पूतो भवतीति विज्ञायते ॥ अध्या 23 सूत्र 28

சண்டாளன்பதிதன்இவர்களுடைய ஸ்பர்சமேற்பட்டால்உடனே வஸ்திரத்தோடு ஸ்நானம் செய்தால் சுத்தனுகிறுன் என்று வஸிஷ்டர் அபிப்பிராயப்படுகின்றுர்.

25. அத்திரிஸம்ஹிதை.

चण्डाळेन तु संस्पृष्टं यत्तोयं पिबति द्विजः ।
कृच्छ्रपादेन शुध्येत आपस्तम्बोऽब्रवीन्मुनिः ॥

சண்டாளன் சம்பந்தப்பட்ட ஜலத்தை பிராமணன் சாப்பிட்டால் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்று ஆபஸ்தம்பர் கூறுவதாக அத்திரி மஹரிஷி சொல்லுகின்றுர்.

வினு.

ब्राह्मणो वृक्षमारूढश्चण्डाळो मूलसंस्पृशः ।
फलान्यत्ति स्थितस्तत्र प्रायश्चित्तं कथं भवेत् ॥

ஓர் விருக்ஷத்தின்மேல் பிராமணன் இருந்துகொண்டு பலங்களைப் புசிக்கின்றுன். அம்மரத்தின் அடியில் சண்டாளனுமிருந்து

கொண்டு பழத்தைச் சாப்பிடுகிறான். இந்தப் பிராமணனுக்குப் பிராயச்சித்தம் எப்படி?

விடை.

ब्राह्मणान्समनुज्ञाप्य सवासा स्नानमाचरेत् ।
अहोरात्रोषितो भूत्वा पञ्चगव्येन शुध्यति ॥ अत्रिः ।

பிராமணர்களிடம் சென்று அனுக்ஞைபெற்று தரித்திருக்கும் வஸ்திரங்களோடு ஸ்நானம்செய்து ஓர் இரவும் பகலும் உபவாஸமிருந்து பஞ்சகவ்யப் பிராசனம் செய்தால் சுத்தனாய்விடுகிறான். அன்றியும்,

एकाक्षरप्रदातारं यो गुरुं नाभिमन्यते ।
शुनां योनिशतं गत्वा चण्डालेष्वपि जायते ॥

ஒரு எழுத்தை ஒருவரிடமிருந்து நாம் கிரஹித்தாலும், அவரைக் குருவாகப்பாவித்து மரியாதை செய்யவேண்டும். அவ்விதம் எவன்மரியாதை செய்யவில்லையோ அவன் அக்கொடிய பாபத்தைப் போக்கவேண்டி நூறுஜன்மம் நாயாகவும், பிறகுசண்டாள யோனியில் பல ஜன்மாக்களையும், அடைகின்றான் என்றும், அதிக பாபத்தைச்செய்தவர்கள் சண்டாளஜாதியிற்பிறந்து அதன் பயனை யனுபவிக்கிறார்களென்றும் அத்திரி ஸம்ஹிதையிலேயே வரையப்பட்டிருக்கின்றது.

இத்தீண்டாமை விஷயத்தில் இவைபோன்ற இன்னும் பல ஸ்மிருதி வசனங்கள் கிடைக்கக்கூடியதாயிருந்தாலும் விரிவிற்கு அஞ்சி விடுத்தனம்.

இதுவரையில் கூறப்பட்ட ஒவ்வொரு ஸ்மிருதியிலும் தீண்டாமை விஷயத்தைப்பற்றி அது அவசியம் இருக்கவேண்டுமென்றும், அதைஒழித்தால் பலஅநர்த்தங்கள் நேரிடுமென்றும் ஸ்பஷ்டமாய் விதிக்கப்பட்டிருக்கிறதென்பதை இதை நன்றாய் கவனித்துப் பார்ப்போர்களுக்கு நாம் கூறவேண்டியது அனாவசியம்

இவ்விதம் அனேக ஸ்மிருதிகள் ஏகாபிப்பிராயமாய்த் தீண்டாமை அவசியம் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துங்கால்

அதை விலக்கவேண்டுமென்று சிலரால் செய்யப்படும் முயற்சியைக்கொண்டு அதை எப்படி விலக்கமுடியும்?

இனி மூன்ருவதுப் பிரமாணமான இதிஹாஸ புராணங்களின் அபிப்பிராயங்களும் இவ்விஷயத்தில் எப்படி இருக்கின்றன என்பதைக் கவனிப்போம்.

1. ஸ்ரீமத் ராமாயணத்தில் பாலகாண்டத்தில் கதிரவன் குலத்தில் தோன்றிய திரிசங்குவெனப் பெயர்வாய்ந்த ஓர் வேந்தன் தன் சரீரத்துடன் தேவபாவத்தையடையவேண்டி குலகுருவான வஸிஷ்டரை அனேக வந்தனங்களுடன் பலவாருய் வேண்டியும் அவர் உடன்படவில்லை. உடனே அவரது புதல்வர்களிடம் சென்று மிகுந்த பக்திசிரத்தையுடன் வஸிஷ்டரால் மறுக்கப்பட்டதையும் அறிவித்து தாங்கள் என்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொடுக்க வேண்டுமென்று அவ்வேந்தன் கேட்குங்கால் வஸிஷ்ட புத்திரர்களால் சபிக்கப்பட்டவுடன் சண்டாளனுய் மாறினுரென்பது எல்லோருமறிந்த விஷயம். அந்த ஸந்தர்ப்பத்தைப் பால காண்டம் 58-வது ஸர்க்கத்தில் வர்ணிக்கும் காலத்தில் வால்மீகி மகரிஷி சொல்கின்றதாவது:—

अथ रात्र्यां व्यतीतायां राजा चण्डालतां गतः।
नीलवस्त्रधरो नीलः पुरुषो ध्वस्तमूर्धजः॥
चित्यमाल्यानुलेपश्चायसाभरणोऽभवत्।
तं दृष्ट्वा मन्त्रिणस्सर्वे त्यक्त्वा चण्डालरूपिणम्।
प्राद्रवत्सहिता राम पौरा येऽस्यानुगामिनः॥

"பிறகு ராத்திரி கழிந்தவுடன் சண்டாளத்தன்மையை அடைந்த ராஜாவானவர் கருப்பு வஸ்திரம் தரித்தவராகவும், கருப்பாகவும், பயங்கரமாகவும், தலைவிரித்தவராகவும், சிதையிலுள்ள மாலைகளாலும், சந்தனுதிகளாலும் அலங்கரிக்கப்பட்டவராகவும், இரும்பு ஆபரணம் தரித்தவராகவும் ஆய்விட்டார். சண்டாள ரூபத்தை அடைந்த அவரைப் பார்த்தவுடன் எல்லா மந்திரிகளும் அவரை விட்டு விலகினுர்கள். அவர் கூடவிருந்த புரவாஸிகளும் வேக

மாய் ஓடிவிட்டார்கள்'' இந்த அபிப்பிராயத்தையே தேவீபாகவதம் முதல் ஸ்கந்தத்திலும் விஸ்தாரமாய் வரையப்பட்டிருக்கின்றது.

மஹாபாரதம் அனுசாஸன பர்வாவில் 77-வது அத்தியாயத்தில்,

शूद्रश्चण्डालमत्युग्रं वध्यघ्नं बाह्यवासिनम् ।
ब्राह्मण्यां जनयति ॥

பீஷ்மாசாரியாரிடம் தர்மபுத்திரர் ஸங்கரஜாதி எப்படி ஏற்படுகின்றது என்று வினவுங்கால் அவர் கூறுகிறதாவது, சூத்திரனால் பிராமண ஸ்திரீயினிடத்தில் உண்டுபண்ணப்படுகிறவன் சண்டாளன். அவன் குரூர ஸ்வபாவமுள்ளவன். அரசர்களால் கொலை செய்ய வேண்டுமென்று உத்திரவிடப்பட்ட குற்றவாளிகளை வதம் செய்ய வேண்டும். கிராம நகரங்களுக்கு வெளியில் அவன் வஸிக்கவேண்டும் என்பதே.

(தொடரும்).

ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள்,
ஸ்ரீஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகள் மடம்
ஆஸ்தானவித்வான் ஆர்யதர்மம்உபபத்திராதிபர்.

ஆர். கிருஷ்ணஸாமி அய்யர், எம்.ஏ.,பி.எல்.,
ஹைகோர்ட்டு வக்கீல்.

வேதசாஸ்திரபாடசாலை.

வேதமும் சாஸ்திரமும் சேர்த்து ஒரே இடத்தில் கற்பிக்கப்படுகின்ற பாடசாலைகள் நம் நாட்டில் மிகக்குறைந்துள்ளன. அவ்விலக்குகளைக்கடந்து அவ்விரண்டும் கற்க விரும்பும் மாணாக்கர்களுக்குப் பேருதவிபுரியும் பாடசாலைகளில் இதுவுமொன்று. இதில் அந்தணச்சிறுவர்களுக்கு ஆகார முதலிய சௌகரியங்கள் போதுமானபடி செய்யப்பெற்று வருவதுடன் வேதசாஸ்திர விற்பத்திவாய்ந்த குடுமாமலை ப்ரும்மஸ்ரீ பஞ்சாபகேச கனபாடிகளை ஆசார்யராகவுங்கொண்டுள்ளது. நன்கு நடைபெற்றுவருகின்ற

இப்பாடசாலை சோழநாட்டைச்சார்ந்த "அன்பில்" என்ற ஊருக்கு மாற்றப்படலாம் எனஒரு வதந்தி உலவுகின்றது. இதனிடத் தன்புபூண்ட பாண்டி நாட்டினர் இதனை இவ்வூரினின்றும், மாற்றுதிருக்க விரும்புகின்றனர். ஏனெனின் எங்கும் ஆங்கிலக் கல்விச்சாலைகள் மயமாயிருக்கின்ற இக்காலத்தில் அதிலும் இப்பாண்டியதேசத்தில் வேதமும் சாஸ்திரமும் கற்கவிரும்பும் ஏழை சிறுவர்களுக்கு தாயகமாய் விளங்குகின்ற இரண்டொரு பாடசாலைகளும் இந்நாட்டைவிட்டுமாறுவதைஎவர்தான் வற்புறுத்தக்கூடும்? இப்பாண்டி நாட்டைவிட்டு இப்பாடசாலை விலகுமாயின் இப்பாண்டிநாட்டு வாசிக்களுக்கன்றோ தமது நன்மையை விருத்திசெய்வதில் இடையூறுரும்.? இப்பாடசாலை இவ்வூரிலிருப்பதே மிக்காராசியாகுமென்றும் சிலர் கூறுகின்றனர். இவ்வூர் ஸ்ரீமான் மஹாதேவர் அவர்களின் கற்பகவிநாயககலாசாலை ஆங்கிலம் தமிழ்கற்போருக்கு எவ்வாறு உதவி செய்கின்றதோ அவ்வாறு வடமொழி வேதங்கற்போருக்கு நல்ல உதவிபுரியும் இப்பாடசாலையை வேறெங்கும் மாற்றுதிருக்குமாறு இவ்வூர் பொதுஜனங்கள் விரும்புகின்றனர். கல்வித்துறையில் புதிய புதிய பாடசாலைகள் நம்நாட்டில் தோன்றவேண்டும். வேதங்களில் முதன்பெற்ற 'ருக்வேதபாடசாலை" இத்தனவைசியர் நாடுகளில் இப்பொழுதில்லை. அதையும், அதுபோன்று இந்நாட்டில் இல்லாதிருக்கின்ற கலைகளையும், விருத்திசெய்ய வேண்டுமென்றே பாண்டிய நாட்டினர் வேண்டுகின்றனர். கிடைத்தநன்மைகளை விருத்திசெய்துகொள்வதே பாண்டியநாட்டின் இயற்கை. அந்த நன்மைகளை இழப்பதில் அவருக்குரிமை உண்டோ?

குருபக்திப்பிரசாரம்.

இவ்வூர் பாடசாலை ஆசிரியர் பிர்ம்மஸ்ரீ K. A. பஞ்சாபகேசகனபாடிகளவர்களால் இயற்றப்பெற்றுள்ள "ஸ்ரீமதாசாரியஸ்துதி" என்னும் அரியநூலை ஷெயார் ஸ்ரீமான். ராம. சு. லெ. அவர்களின் பொருளுதவியால் அச்சிட்டு, எல்லோருக்கும் இனமாக வழங்கினர்.

கோனபட்டு. டி. கே. ராமபத்திர சர்மா.

தெய்வங்கள்.

மாதா, பிதா, குரு, தெய்வம், என்பதாக, தாயை முதல் தெய்வமாகவும், தகப்பனை இரண்டாம் தெய்வமாகவும், ஆச்சாரியனை—உபாத்தியாயனை மூன்றும் தெய்வமாகவும், சாக்ஷாத் கடவுளை நான்காம் தெய்வமாகவும், கூறியுள்ளார் பெரியோர்.

அதாவது, முதல் கூறியுள்ள மூவரும் தெய்வத்திற்கு சமமானவர்கள் என்பதாம்.

முதல் மூன்று தெய்வங்களும் பேசுந்தெய்வங்கள். நான்காவது பேசாத தெய்வம்.—ஞானக்கண்ணாலன்றி இவ்வூனக்கண்ணால் காணமுடியாத தெய்வம்—பக்குவர்களுக்கன்றி தக்குவர்களுக்ககப்படாத தெய்வம்—ஆகையால் பேசுந் தெய்வங்களே சிறந்த தெய்வம்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்".

"மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்"

என்ற ஔவையாம் நம்மூதாட்டியின் சொற்படி, தாய் தகப்பனை ஒருநாளும் ஒருவரும் மறக்கக்கூடாது. அவர்கள் நமக்குச் செய்துள்ள உபகாரத்திற்கு—நமக்காக அவர்கள் பட்டுள்ள கஷ்டங்களுக்குப் பிரதியாக, நாம் பல ஜன்மமெடுத்து உழைத்தாலும், சிசுருஷை புரிந்தாலும் அவர்கள் ஒருநாள் செய்துள்ள—நன்மைகளுக்கு ஈடாகாது. ஆதலால் இவர்களையே முதல் தெய்வமாகக் கூறியுள்ளார்கள்.

"தந்தை சொன்மிக்க மந்திரமில்லை"

"தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை"

என்ற பெரியோர் வாக்கியம் இங்கு கவனிக்கற்பாலது.

முன்னொருகாலத்தில் "கௌசிகன்" என்பான் ஒருவன் தவமியற்றி வந்தான். சின்னாட்செல்ல ஒருநாள் அக்கௌசிகனுக்கு நேராக ஆகாயவீதியில் சஞ்சரித்துவந்த ஒரு கொக்கு ஒன்று விஷ்டைபோட அவ்விஷ்டை கீழேதவமியற்றியிருந்த கௌசிகன் தலையில் விழ, அதுகண்ட கோசிகன் கோபமிகக்கொண்டு ஆகாயத்தை நோக்கினன். அவனியற்றியுள்ள தவவலிமையினால் அக்கொக்கு எரிந்து சாம்பலாயின.

அதையறிந்த கௌசிகன் சந்தோஷம் மிகக்கொண்டு, தான் செய்துவந்த தவம் ஈடேறிவிட்டதென நினைத்து, மனதில் மிக்க அகந்தைகொண்டு அவ்விடம்விட்டுக் கிளம்பினன்.

ஒருநாள் தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனாரின் இல்லம் சென்று, அமுது வேண்டினன் கௌசிகன். அச்சமயம் பொய்யா மொழியாரின் உத்தம தர்மபத்னியாம் கற்புக்கரசி வாசுகியம்மை

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

"கணவனே கண்கண்ட தெய்வம்" என்னும் நீதிவாக்கியங்களின் படி தனது கணவனை பூசித்திருந்தாள். ஆதலால் அமுதளிக்கச் சின்னேரம் சென்றது.

அகந்தை மிகக் குடிகொண்டுள்ள கௌசிகன் அது பொறு மல் அவ்வம்மையை மிகுந்த கோபத்துடன் பார்த்தான்.

அதுகண்ட அவ்வம்மணி நகை மிக நகைத்து, "ஐயா, என்னையும் கொக்கென்று நினைத்தீரா? நான் கொக்கல்ல" எனவும், அதுகண்ட கௌசிகன் மிக வியப்படைந்து தன் மனத்தகத்தே குடிபுகுந்த அகந்தையை வெருட்டி, அவ்வம்மையின் திருவடி பணிந்தனன்.

மேலும், "அம்மணி, அடியேன் தங்களது பெருமையை அறியாது அபசாரம் புரிந்துள்ளேன். அடியேன்மீது கருணை கூர்ந்து அநுக்கிரகித்தருளவேண்டும்" என்றும் வேண்டிக்கொண் டனன். அதைச்செவியுற்ற வாசுகியம்மை மனமிரங்கி "ஐயா, அடுத்த ஊரிலுள்ள கடைத்தெருவில் கசாப்புக்கடை வைத்திருக்கும் சாயபுவிடம்போனால் உமது மனதிலுள்ள சங்கையை"த் தீர்ப்பான் என்றார். அதைக்கேட்ட கௌசிகன் மிக்க வியப்படைந்து அக்கசாப்புக் கடைக்காரனைத் தேடியடைந்தனன்.

கௌசிகன் வரவையறிந்த அக்கசாப்புக்கடைக்காரன் கௌசிகனை நோக்கி "வாரும். வாசுகியம்மை யனுப்பவந்தீரோ?" என்றான். அதைக்கேட்ட கௌசிகன் ஆச்சரியம் மிகக்கொண்டு சாயபுவை நோக்கி, "ஐயா, நான் வந்த வரலாற்றை நீர் எவ்விதம் அறிந்தீர்" எனக் கேட்க, அதற்கு சாயபு, "ஐயா, கௌசிகரே!

என் பின்வாரும் கூறுகிறேன்"என்றான். கௌசிகனும் அச்சாயபு பின் சென்றான்.

சாயபு நேரே வீடு சென்றதும் ஸ்நானபானாதிகளை முடித்துக்கொண்டு, தன் தாய் தந்தையரை அன்புடன் பூஜித்து உபசரித்து, அவர்களுக்கு வேண்டியவைகளைக் கொடுத்து, அவர்கள் மனம் திருப்தியாகுமாறு நடந்து, அவர்களின் ஆசியைப் பெற்று, அப்பால் கௌசிகனிடம்வந்து, "ஐயா! கௌசிகரே! "தந்தைதாய்ப்பேண்" என்ற மூதாட்டியின் வாக்கியப்படி தாய் தந்தைகளை தெய்வமாகப் பாவித்து, வழிபடுதலே உத்தமம். "தாய் தந்தையர் அன்னத்திற்கு ஆலாய்பாக்க தனயன் தனுஷ்கோடியில் தானதருமம் செய்வதால்" யாது பயன்? "மாதா வயிறெறிய மஹேசுவரபூஜை செய்வதால் யாது நன்மை?" ஆதலால் தானம் செய்யாவிட்டாலும், தவம் இயற்றாவிட்டாலும், தாய் தந்தையரை வழிபடுதல் ஒன்றே போதும். அவ்விதம் யான் செய்து வருவதால்தான் நீர் கொக்கை யெறித்து வாசுகியம்மையை யடுத்தது முதலான விபரங்களையறிந்தேன். ஆதலால், நீர்இன்றுமுதல் உமது வீடுசேர்ந்து தாய் தகப்பனைத்தெய்வமாக நினைத்து வழிபடும். இகபரமிரண்டிலும் நன்மையுண்டு, என்று கூறினன். உடனே கௌசிகன் தனதில்லமடைந்து மாத்ரு பித்ரு பக்தியைச் செய்து வரலாயினன்.

இக்கதையால்"ஸ்திரீகள்கணவனையேதெய்வமாகப்பாவித்து போற்றினால் மட்டும் போதும்" என்றும், அத்தகைய மாதரசிகளின் மகிமையை அளவிடமுடியாதெனவும், (அனுசூயா, நாளாயினி, சாவித்திரி, தமயந்தி, சந்திரமதி முதலிய மாதரசிகள் தாம் தாம் செய்துவந்த பதிபக்தியினால் அநேக அரிய செயல்களைச் செய்துள்ளார் எனவும்,) புருஷர்களுக்கு மாதா பிதாவே தெய்வமென்றும், அவர்களைப் போற்றி வழிபடுவதால் அநேக நன்மைகளை அடையலாமென்றும், (புண்டரீகன் முதலியவர்கள் பித்ரு பக்தியினால் பெரும்பேற்றை அடைந்தார்களென்றும்,) அறியக்கிடக்கின்றது.

மூன்றாவதாகிய ஆசாரிய தெய்வத்தைப் பற்றியும் இனிச் சிறிது கூறுவாம்.

மாந்தை, சா. கிருஷ்ணய்யன்.

ஸம்ஸ்காரம்.

ஆரியர்களே! இங்கு சற்று ஸம்ஸ்காரத்தின் மஹிமையைப் பற்றிக் கூறுவோம். நமக்கு பலவிதமாகக் காலத்தின் கொடுமையால் நேரிடும் கேடுகளை விலக்க வேண்டுமென்றால் சாஸ்திரங்களில் கூறியவாறும் அதிகாரத்திற்குத்தகுந்தவாறும் ஸம்ஸ்காரங்கள் அனுஷ்டிக்கத் தக்கவைகள் என்பது முதல் விஷயமாகும்.

'ஸம்ஸ்காரங்களை அடையப்பெற்ற மனிதர்கள், ஒருக்காலும் நிஷேதிக்கப்பட்ட பாபங்களைச் செய்யார்கள்' என்பதே ஸம்ஸ்காரத்தின் மஹிமையாகும். இதையே கீழ்கண்டவாறு மனுவும்—சொல்லுகிறார்:—

वैदिकैः कर्मभिः पुण्यैः निषेकादिर्द्विजन्मनाम् ।
कार्यश्शरीरसंस्कारः पावनः प्रेत्यचेह च ॥

இவ்விடத்தில் '**प्रेत्यचेहच**' என்றதால் ஸம்ஸ்காரத்தின் உபயலோக உபகாரத்தன்மையையும் வெளிப்படையாக்கியது கவனிக்கத்தக்கது. இதனால் உபய உலக உபகாரத்தன்மை வெளிப்பட்டபடியால் தற்காலத்தின் உபயோகத்தில் ஸம்ஸ்காரம் எவ்வளவு தூரம் பயன் படுகிறது என்பதுஎடுத்துகாட்ட வேண்டியதில்லை. ஆனது பற்றியே ஹாரீதரும் **ब्राह्मसंस्कारसंस्कृतः ऋषीणां समानतां सामान्यतां समानलोकतां सायोज्यतां गच्छति**' என்றும், '**दैवेनोत्तरेणानुसंस्न्यताः देवानां समानतां सामान्यतां समानलोकतां सायुज्यतां गच्छति**' என்றும் சொல்லியிருக்கிறார். இதன் தாத்பர்யமென்னவென்றால் கர்ப்பாதானம் முதலிய 16 ஸ்மார்த்த ஸம்ஸ்காரங்களையடைந்த மனிதன் ரிஷிக்குப் போல் பூஜையும் ரிஷிக்குச் சமமான ரூபத்தையும் ரிஷி சுபாவமுடைமையையும் ரிஷிகளோடு ஒரே இடத்தில் வசிக்கும் சுகத்தையும் அடைகிறான். தனது சரீரமும் ரிஷிகளின் சரீரம் போலாகிறது. இவ்விதமே சிரௌதை (Srowtha) மான ஸம்ஸ்காரங்களையடைந்தவன் தேவனைப்போல் பூஜையும் தேவனுக்கு சமமான ரூபத்தையும் தேவசுபாவமுடைமையையும் அப்படியே தேவர்களோடு ஒரே உலகில் வசிக்கும் பாக்கியத்தை

யும் அடைகிறான். தன் சரீரமும் தேவசரீரம்போல் ஆகிறது. என்று ஸம்ஸ்காரத்தின் மஹிமை நன்கு வெளியாகிறது.

இதையே கௌதமரும்,

यस्य खलु संस्काराणामेकदेशोऽप्यष्टावात्मगुणाः अथ स ब्राह्मणः सायुज्यं सालोक्यं च गच्छति ॥

என்று விவரித்திருக்கிறார். அப்படியே சங்கர் லிகிதர் இருவர்களும் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்கள்:—

संस्कारैः संस्कृतः पूर्वैः उत्तरैरथ संस्कृतैः ।
नित्यमष्टगुणैर्युक्तः ब्राह्मणो ब्राह्मलौकिकः ॥
ब्राह्मं पदमवाप्नोति यस्मान्नच्यवते पुनः ।
नाकपृष्ठं यशो धर्मं त्रिरीजानास्त्रिविष्टपम् ॥ इति ।

இதன் பொருளாவது—பூர்வமான ஸ்மார்த ஸம்ஸ்காரங்களாலும் அப்படியே உத்தரமான ச்ரௌதஸம்ஸ்காரங்களாலும் ஸம்ஸ்காரமடைந்தவனும் ஆத்மகுணாஷ்டகத்தோடு கூடியவனும் (1) பாகம் (2) ஹவிஸ் (3) ஸோமம் இம்மூன்றால் யஜிப்போனும் சுவர்க்கம், கீர்த்தி, தர்மம் இவைகளை அடைகிறான். அவ்விதமே கிரமமாக **ब्राह्मलौकिकः** என்றவாறு ப்ரும்மலோகவாச யோக்யதையை பெற்றவனாய் ',**तद्विष्णोःपरमं पदम्**'' என்று சுருதியால் வர்ணிக்கப்பட்டதாயும், **यस्मात्भूयो न जायते** என்றும் கூறியவாறு எந்நாளும் மழிவில்லாத சாசுவதமான பிரும்மலோகத்தையடைகிறான், இங்கு **यशोधर्मं नाकपृष्ठं ब्राह्मलौकिकस्सन् ब्राह्मं पदमवाप्नोति** என்று வரிசையாக வர்ணிக்கப்பட்டிருக்கிறபடியால் சுருதியில் சொல்லப்பட்ட கிரமமான முக்தி மார்க்கமும் சொல்லப்பட்டதாக ஆகிறது. மனிதர்களுக்குள் ஒருவன் தர்மத்தையும், ஒருவன் அர்த்தத்தையும், மற்றொருவன் காமத்தையும் பின்னுமொருவன் மோக்ஷத்தையும், இச்சிக்கிறான். ஆதலால் எவனுக்கு எதில் ஆசையேற்படுகிறதோ அததுகளை அவரவர்களுக்கு ஸம்ஸ்காரங்கள் கொடுக்கின்றன. என்று ஸ்பஷ்டமாகத்தெரிகிறது. [இன்னும் வரும்]

K. S. ராமஸ்வாமி.